Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.

SESSIONS CASE NO.23/2021

Deposition of PW16

| | | | |
|---|---|---|---|
| Name | : சதாம்உசேன் என்கிற அஸ்வின் | Village | : |
| Father's / Husband's Name | : அகமது | Calling | : |
| Age | : | Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 27th day of November 2025.

(எதிரிகள் 2 முதல் 5 ஆஜர். எதிரி 1 ஆஜர்படுத்தப்பட்டார்)

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவேற்காடு, கோலடி சீனிவாசன் நகரில் குடியிருந்து வருகின்றேன். நான் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகின்றேன். இந்த வழக்கு சம்பவத்தில் இறந்துபோனவர் பெயர் அஜித்குமார். திருவேற்காடு ஏரிக்கு நான் போகும்போது அவர் எனக்கு பழக்கம். எங்கள் இரண்டு பேருக்கும் பிரதீப் என்பவர் பழக்கம். பிரதீப் எனக்கு அஜித் மூலமாக பழக்கம். இவ்வழக்கில் இறந்துபோன அஜித்குமார் தண்ணி அடிப்பார், கஞ்சா அடிப்பார். அவர் கஞ்சாவை திருவேற்காட்டை சேர்ந்த லால் என்பவரிடம் வாங்கி வந்து அடிப்பார். கடந்த 12.09.2020 அன்று நான் காலையில் 8, 8.30 மணியளவில் அஜித் எனக்கு போன் செய்து ஏரிக்கு வரச்சொன்னார். கோலடி அபிராமி நகரிலிருக்கும் லாலை போய் பார்க்க வேண்டும் என்று என்னை அழைத்தார். லால் கூப்பிட்டதாக சொல்லி அஜித் என்னை அழைத்தார். நானும் அஜித்தும் என்னுடைய ஆட்டோவில் அபிராமி நகர் ஏரிக்கு சென்றோம். அங்கு போனவுடன் லால் நான் சரக்கு வாங்கிட்டு வரசொல்லியிருக்கேன் இருங்க அடிச்சுட்டு போலாம் என்று சொன்னார். அங்கு லால்பிரகாஷ், கட்டப்பா, காத்தவராயன், செந்தில்குமார், குணசேகரன் ஆகியோர் அங்கு இருந்தார்கள். வெளியே நின்றுகொண்டிருந்தால் போலிஸ் வரும் அதனால்

வாங்க உள்ள போயிடலாம் என்று காட்டுக்குள் லால் கூட்டிச்சென்றார். உள்ளே போய் உட்கார வைச்சிட்டாங்க. நான், அஜித், லால், காத்தவராயன், செந்தில், குணசேகரன் ஆகியோர் கும்பலாக உட்கார்ந்தோம். தண்ணி வரவரைக்கும் கஞ்சா அடிக்கலாம் என்று சொன்னார்கள். எனக்கு கஞ்சா அடிக்கும் பழக்கம் இல்லாததாலும் அந்த பசங்கள எனக்கு பழக்கம் இல்லாததாலும் நான் ஒரு 10 அடி தூரம் தள்ளி உட்கார்ந்திருந்தேன். லால், குணசேகரன், அஜித் இவங்கள் எல்லாம் உட்கார்ந்து கஞ்சா அடித்துக் கொண்டிருந்தார்கள். அப்பறம் சரக்கு எடுத்துட்டு வந்தாங்க என்னிடம் கொண்டுவந்து குடி என்று அஜித் சொன்னார். அஜித் என்கூட உட்கார்ந்து ஊற்றினான். ஒரு கட்டிங் போட்டோம். அப்ப லால் வாயா அஜித்து பாங்கு பாட்டில பத்த வை என்று கூப்பிட்டார். அஜித்போய் அந்த பாட்டிலை வாங்கினான். அஜித் அந்த பாட்டிலை வாங்கி குணிந்து வாயில வைத்து உறிஞ்சினான் அப்போது லால் கத்தியை வைத்து அஜித்தின் தலையில் வெட்டினான். ஐயோ என்ற சத்தம் கேட்டவுடன் நான் திரும்பி பார்த்தேன். லால் கையில் இருந்த கத்தி அஜித் தலையில் மாட்டியிருந்தது. அஜித்து கை பிடித்துக்கொண்டு எனக்கு குழந்தை பிறக்கபோகுதய்யா விட்டிருய்யா என்று கேட்டான். அப்போது அஜித்து லால் கையை பிடித்திருந்தான் என்ன விட்டுரு என்னை விட்டுரு என்று கேட்டபோது லால் திரும்பவும் அஜித் கையில் வெட்டினான். நான் நின்று என்ன வெட்டுராங்க என்று திரும்பி பார்த்தேன். அப்போது லால் அவன விடாதிங்க விடாதிங்க பிடிங்க என்று சொன்னவுடன் நான் காட்டுக்குள்ளே இருந்து வெளியே ஓடி வந்துவிட்டேன். கூட இருந்தவங்க எல்லாம் துரத்திட்டு வந்தாங்க. நான் வெளியே ஓடி வந்துவிட்டேன். வெளியே வந்தவுடனே அங்கே செங்கல் சேம்பரில் பெரியவங்க எல்லாம் உட்கார்ந்திருந்தாங்க. அவர்களிடம் வந்து சொன்னேன். அங்க உட்கார்ந்திருவர்கள் இங்க வந்து சொல்லாத நீ முதலில் போலிசிடம் போய் சொல்லு என்று சொன்னார்கள். அங்கிருந்து ஓடிப்போய் செங்கல் சேம்பர் அருகே இருந்த முட்புதரில் ஒரு அரை மணிநேரம் உட்கார்ந்துவிட்டேன். அதற்கு அப்பறம் எழுந்து போகும்போது பிரதீப்பை பார்த்து அஜித்தை லால் பசங்க எல்லாம் வெட்டிடாங்க என்று சொன்னேன். அவன் சின்ன பையன் தான். ஒன்னு இல்ல ஒன்னு இல்ல என்று சொல்லி என்னை உட்கார வைச்சிட்டான். அதன்பிறகு எல்லாரும் பார்த்திட்டுவந்து அஜித் செத்துட்டான் என்று சொன்னாங்க. அதன்பிறகு ஒரு ஒரு மணிநேரத்தில் திருவேற்காடு போலிஸ் அங்கே வந்தார்கள். புகார் யார் கொடுத்தது என்று எனக்கு தெரியாது. போலிஸ் என்னை ஸ்டேசனுக்கு கூட்டிபோய் நீ இருந்தியா, யார்

பன்னுனது என்று கேட்டார்கள். இந்த மாதிரி கோலடிக்கு கூட்டிட்டு போனான் அங்கே லால பார்க்க போனப்ப லால் வெட்டிட்டார் என்னை வெட்ட வந்தாங்க நான் ஓடி வந்துவிட்டேன் என்று சொன்னேன். அன்றை தினம் அஜித்தை வெட்டியவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கின்றார்கள். இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகியிருப்பவர்களில் நீதிபதியை நோக்கி இடமிருந்து வலமாக உள்ளவர்களில் முதலாவதாக நிற்பவரை பார்த்து அவர் பெயர் லால் என்றும், இரண்டாவதாக நிற்பவர் பெயர் கட்டப்பா என்றும், மூன்றாவதாக நிற்பவர் காத்தவராயன், நான்காவதாக நிற்பவர் குணசேகரன், ஐந்தாவதாக நிற்பவர் செந்தில்குமார் என்று அடையாளம் காட்டுகிறார். இது சம்மந்தமாக போலிசில் என்னை அந்த இடத்திற்கு கூட்டிச் சென்று விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 5 வரையுள்ள எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் திருவேற்காடு ஏரியாவிற்கு சம்பவத்திற்கு 10, 15 நாட்களுக்கு முன்பாக வாடகைக்கு குடி போயிருந்தேன். அதற்கு முன்பாக நான் அயப்பாக்கத்தில் குடியிருந்தேன். நான் ஏரிக்கு போகும்போது தான் அஜித்குமார் எனக்கு பழக்கம். நான் ஏரிக்கு எதற்காக போவேன் என்றால் பாத்ரூம் போவதற்காக செல்வேன். எனக்கும் இறந்தவருக்கும் சுமார் 10, 15 நாட்கள் பழக்கம். அதற்கு முன்பாக அவர் யார் யாருடன் பழக்கம் வைத்திருந்தார் எந்த கேஸ்களில் எல்லாம் அவர் மீது இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. அன்றைய தினம் நான் சவாரிக்கு போனேனா அல்லது அவர் போன் செய்து போனேனா என்றால் அவன் போன் செய்தவுடன் போனேன். நான் போனதாக சொல்லும் ஆட்டோவின் பதிவு எண்ணை போலிசில் சொல்லியிருக்கிறேனா என்றால் அது வாடகை ஆட்டோ. எனக்கு ஆட்டோ எண் தெரியாது. அந்த ஆட்டோவை போலிசில் எடுத்துச் சென்றுவிட்டார்கள். அந்த ஆட்டோவை விட்டுவிட்டுதான் உள்ளே சென்றோம். எனக்கு எழுத படிக்க ஓரளவுக்கு தெரியும். 5 ஆம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். சம்பவம் நடந்த அன்று போலிஸ் என்னை கூட்டிப்போய் ஸ்டேசனில் உட்கார வைத்துவிட்டார்கள். மறுநாள் போய் சம்பவ இடத்தை காட்டினேன். நான் சென்றபோது எனக்கு அஜித் மட்டும் தான் பழக்கம். மற்றவர்களின் பெயர் எனக்கு எப்படி தெரியும் என்றால் இந்த 10 நாளில் அடிக்கடி கூட்டிட்டு போய் ஒவ்வொருத்தர பார்க்கின்றபோது எனக்கு பெயர் பழக்கமாகிவிட்டது. இந்த சங்கதியை நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் போலிசில் என்னை இது பற்றி கேட்கவில்லை. போலிசார் என்னிடம் எழுத்து மூலமாக எதுவும் கேட்டு வாங்கினார்கள என்றால்

அப்படி எதுவும் வாங்கவில்லை கையெழுத்து வாங்கவில்லை. சம்பவத்திற்கு மறுநாள் சம்பவ இடத்திற்கு நான் சென்றபொழுது போன மாதம் தான் போலிசார் சம்மன் கொடுக்க வந்தார்கள். இதற்கு இடைப்பட்ட காலத்தில் நான் போலிசை சந்திக்கவில்லை. யாரையும் நான் அடையாளம் காட்டவில்லை. சம்பவத்தின் போது நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றால் சரியல்ல. போலிசார் சொல்லிக்கொடுத்த பொய்களை முன்னிலை படுத்தி தான் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் சொல்வதை போல அஜித்குமாருடன் இருந்திருந்தால் நான் தான் போய் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் அரைமணி நேரம் மறைந்து உட்கார்ந்திருக்கமாட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அஜித்குமாருக்கும் அந்த பகுதியில் கஞ்சா விற்பனை செய்து கொண்டிருந்த மற்றொருவருக்கும் இடையில் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றாலும் இந்த எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. போலிசார் எனது முன்னிலையில் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் சம்பவத்தை கண்ணால் பார்க்காத பொய்சாட்சியம் என்றால் சரியல்ல. எதிரிகள் நீதிமன்றத்தில் வைத்து தான் போலிசாரால் அடையாளம் காட்டப்பட்டார்கள் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**